அழைப்பதற்குப் பதிலாக தோட்டக் கலைஞர்கள் என்று அழைத்தால், அவர்களும் வேளாண்மைப் பெருக்கத்தில் ஈடுபடுவார்கள். அதற்கான முயற்சியை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப.. நாராயணசாமி : இதுபற்றி இப்போது பரிசீலிக்கப்படவில்லை. 50 ரூபாய் கொடுக்கின்ற ஸ்டைஃப்பெண்ட் ஸ்கீமில் யார் வேண்டுமானாலும் இந்தப் பயிற்சி பெறலாம்.

கரும்பு வகைகள்

*309 வின.—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு வேளாண்மை துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அதிக அளவு சர்க்கரைச் சத்து கொடுக்கக் கூடிய கரும்பு வகைகள் எவை?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: கீழ்க்கண்ட கரும்பு வகைகள் அதிக சர்க்கரை சத்துள்ள கரும்புவகைகள்:—

	நடும் பட்டம்.	கரும்பு வகைகள்.
1	முன்பட்டம்—டிசம்பர், ஜனவரி ..	கோ. 658, கோ. 449
2	இடைப்பட்டம்—பிப்ரவரி, மார்ச் ..	கோ. 419, கோ. 449, கோ. 740 மேலும் கோ. 658
3	பின்பட்டம்—ஏப்ரல், மே ..	கோ. 419, கோ. 853, கோ. 449 மேலும் கோ. 740
4	தனிப்பட்டம்—ஜூலை, செப்டம்பர் ..	கோ. 449, கோ, 658, கோ, 740 மேலும் கோ, 853

திரு. பி. எஸ். மணியன் : தலைவரவர்களே, குறிப்பிட்ட இந்தக் கரும்பு வகைகளை பல இடங்களில் பயிர் செய்ய முற்படுகிறார்கள். ஆகவே, எந்த எந்தப் பகுதியில் எந்த எந்த கரும்பு வகை அதிக சர்க்கரை சத்து கொடுக்கக்கூடியதாக இருக்கிறது என்பதை அறிந்து சொல்வதற்கு ஒரு நிபுணர் குழு அமைக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, சில கரும்பு வகைகளை சில இடங்களில் பயிரிட்டு ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். ஆராய்ச்சியின் முழுப் பயனும் தெரிந்த பின்னால் அது பற்றி முடிவு செய்யப்படும்.

1972 மார்ச் 22]

திரு. சொ. காவேரிமணியம் : தலைவரவர்களே, இவ்வாறு அதிக மான சர்க்கரை கொடுக்கக்கூடிய கரும்பு நம்முடைய மாநிலத்திலே எந்த எந்த மாவட்டங்களில் பயிரிடப்படுகிறது. அவ்வாறு பயிரிடு வதற்கு அரசின் மூலமாக என்ன உதவி செய்யப்படுகிறது. அந்த வகை கரும்புகளைப் பயிரிடுகின்றன ஊராட்சிகளுக்கு மானியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. எஸ். நல்லசாமி : தலைவரவர்களே, நல்ல கண்டுமுதல் கொடுக்கக்கூடிய கரும்பு வகைகளைப் பயிர் செய்தால், அதை விற்பனை செய்கின்றபோது, சர்க்கரை ஆலைகளில் அதற்கு அதிக ரேட் கொடுக்கச் செய்ய அரசாங்கம் சிபாரிசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அரசாங்கத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டு, அது பற்றி முடிவு செய்யலாம்.

THIRU B. VENKATASWAMY : Sir, best sugar has not been introduced in India. I understand that beet contains more sugar, the percentage being 2 per cent more than that of Sugarcane. May I know from the Hon. Minister whether it would be possible to introduce beet sugar wherever there is possibility that is, in places 3,000 feet above sea level?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : அதுபற்றி தனிக் கேள்வி போடவும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், கோ.658, கோ.449 என்று கரும்பு வகைகளுக்குப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறதே. அதை மாற்றி அந்தக் கரும்பு வகைகளுக்கு சுதந்திரப் போராட்ட வீரர்களின் பெயர்களைச் சூட்டுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, முன்னாலேயே இதைச் செய்திருக்க வேண்டும். அதுபற்றி யோசனை செய்யலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, "கரும்பு தின்னக் கூலி வேண்டுமா" என்று ஒரு பழமொழி உண்டு. ஆனால் அமைச்சரவர்கள் அறிவித்த கரும்பு வகைகள் எல்லாம் அதிகமாக சர்க்கரை கொடுக்கக் கூடியவைகளாக இருக்கின்றன. இப்போது தின்பதற்குத் தரமான கரும்பு இல்லை. அதனால் தின்னக்கூடிய நல்ல கரும்புவகைகளையும் பயிரிடுவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அந்தக் காலத்தில் கரும்பிலிருந்து நேரடியாக சர்க்கரையை சாப்பிடும் சக்தி படைத்த மனிதர்கள் இருந்தார்கள். அவர்கள் சர்க்கரையைப் பற்றி அதிகமாகக் கவலைப்படவில்லை. ஆனால் இந்தக் காலத்தில் சர்க்கரை விரும்பிகள் தான் அதிகமாக இருப்பதால், சர்க்கரை அதிகமாகக் கிடைக்கக்கூடிய கரும்பு சாகுபடியில் தீவிர கவனம் செலுத்தப்படுகிறது.

ஆற்றங்கரைகளில் தேக்குப் பயிர்

*636 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தின் ஆற்றங்கரைகளில் தேக்கு பயிரிடும் சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தமிழகத்தில் உள்ள கால்வாய்கள், ஆறுகள், ஏரிகளின் கரைகளில் தேக்கு, கருவேலம் போன்ற மரங்களைப் பயிரிடும் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் முதல் அமுலில் இருந்து வருகிறது.

கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கும் திட்டம்

*637 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா:

தமிழ்நாட்டிலுள்ள கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கிடும் தமிழ்நாடு அரசின் திட்டத்துக்கு மத்திய அரசு மானியம் ஏதேனும் வழங்குகின்றதா?